**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **CC 513/2004** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of witness for | Prosecution : | **PW - 55** |
| | Defence : | |
| | Court : | |
| Name | : | மோனிகா செலஸ் |
| Father's / Husband Name | : | த.பெ. அடைக்கலராஜ் |
| Village | : | 3-369 தாமஸ்நகர் மைகேல்பட்டி |
| Taluk | : | திருவையாறு தாலுகா தஞ்சாவூர். |
| Caste & Religion | : | கிறிஸ்டியன் |
| Calling | : | கல்லூரிமாணவி |
| Age | : | 22 /2019 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.08.2019**

**என்னால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி.ஆர்மங்கையர்கரசி (பெஞ்ச் கிளார்க்)படி நிலை 3, ச.சுரேஷ் தட்டச்சர்**

**CC 513 /2004** Date: 30.08.2019

முதல் விசாரணை

நான் தற்போது தஞ்சாவூர் 3-369 தாமஸ்நகர் மைகேல்பட்டியில் குடியிருந்து கல்லூரியில் படித்து வருகிறேன்- அ.சா.1 தெரியாது . வழக்கின் 1வது எதிரியை தெரியும். மற்ற எதிரிகளை தெரியாது. கடந்த 22.04.1999 ம் தேதியில் எனது பாட்டி எமிலி புஸ்பம் என்றவருடன் ஐயன்கடை தெருவில் உள்ள கணபதி ஜீவ்ல்லரிக்கு நான் சென்றிருந்தேன். என் பாட்டி கணபதி ஜீவல்லரியில் காமதேனு தங்க நகை சிறுசேமிப்பு திட்டத்தில் மாதம் ருபாய் 150 வீதம் 24 மாதங்களுக்கு மொத்தம் ருபாய் 3600 செலுத்தினார். பின்னர் 28.04.2001 அன்று என் பாட்டி பணம் கட்டிமுடித்த பின்பு நகை எடுப்பதற்காக கணபதி ஜீவ்ல்லரிக்கு சென்று பார்த்த போது கடை பூட்டப்பட்டு சீல் போடப்பட்டிருந்தது . பின்னர் என் பாட்டி விசாரித்த போது 1ம் எதிரி கடை பூட்டிவிட்டு எங்கள் பணத்தை மோசடிசெய்து ஓடி விட்டதாக தெரிந்து கொண்டார். என் பாட்டி கட்டிய பணத்தை மோசடி செய்த கணபதி என்பவர் மீது மாவட்ட குற்றப்பிரிவில் புகார் அளித்தார். என் பாட்டி பணம் செலுத்தி அவருக்கு வழங்கப்பட்ட பாஸ்புக்கின் கணக்கு

எண் ஏ-1432 என் பெயரில் வழங்கப்பட்ட பாஸ்புக் சா.பொ. 94 ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது பிறந்த தேதி 08.11.1997. என் பாட்டியுடன் கடைக்கு சென்ற போது எனது வயது 2 வயது ஆறுமாதம் ஆகும் .2001ம் வருடத்தில் எனக்கு 5 வயது ஆகும். எனக்கு என் பெயரில் பாட்டி பணம் கட்டினாரா என்ற விபரம் எதுவும் நேரடியாக அப்போது தெரியாது என்றால் சரிதான். மேற்படி விபரங்கள் எனது பாட்டி சொல்லி தெரியும் . தஞ்சாவூர் ஐயன் கடைதெருவில் கணபதி ஜீவல்லரி என்ற கடையே இல்லையென்றாலும் காமதேனு தங்கநகை சிறுசேமிப்பு திட்டம் என்று எதுவும் இல்லை என்றாலும் நான் முன்விசாரணையில் சொல்லியுள்ளவாறு மேற்படி திட்டத்தில் என் பாட்டி சேரவே இல்லையென்றாலும் அதே போல் தொகை எதுவும் செலுத்தவில்லையென்றாலும் சரியல்ல. சா.பொ. 94 இவ்வழக்கிற்கு சம்மந்த படாத ஆவணம் என்று சொன்னால் சரியல்ல .என் பாட்டி மாவட்ட குற்றப்பிரிவு போலிசாரிடம் புகார் கொடுத்தாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. போலிஸார் சொல்லிக்கொடுத்தன் பேரில் முன்விசாரணையில் சாட்சி அளித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். என் பாட்டி கட்டியதாக சொல்லும் பணத்திற்கு உரிய பரிசு பொருட்களை என் பாட்டி பெற்றுவிட்டதாக சா.பொ. 94 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மறுவிசாரணை - இல்லை

ஒம்.அ.முகம்மதுஅலி,
நீதித்துறை நடுவர் எண்-1
தஞ்சாவூர்.